# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்
# க.பொ.த உயர்தரம்
# தமிழ்
# மாதிரி வினாத்தாள் - 02

தருமராசா அஜந்தகுமார் **B.A(Hons) M.Phil**
யா/ ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்

- ***மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.***

( I)

**வாரல் எம் சேரி தாரல் நின் தாரே**
**அலராகின்றால் பெரும காவிரிப்**
**பலர் ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த**
**ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை**
**அரியல் அம் புகவின அம் தோட்டு வேட்டை**
**நிரைய ஒள்வான் இளையர் பெருமகன்**
**அழிசி ஆர்க்காடு அன்ன இவள்**
**பழிதீர் மாண்ணலம் தொலைதல் கண்டே.**

அ) இப்பாடலில் வாயில் மறுக்கும் தோழியின் மதிநுட்பத்தை விளக்குக.

ஆ) பாடலில் இடம்பெற்றுள்ள அணியையும் குறிப்புப் பொருளையும் விளக்குக.

இ) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

தார், பிணித்தல், தோடு, மாணலம்

# தோழியின் மதிநுட்பம்

- தலைவனுக்கு வாயில் மறுக்கின்ற இப்பாடலில் அவள் மறுக்கும் விதத்தில் மதிநுட்பத்தைக் காணமுடிகின்றது
- காவிரியின் கரையில் பலரும் காணத்தக்கதாக யானை கட்டப்பட்டிருந்ததைப் போல தலைவனும் பரத்தையின் ஆசையிலே பலரும் அறியத்தக்கதாகக் கட்டுண்டிருந்தான் என்பதைக் குறிப்புப் பொருளால் உணர்த்துகின்றாள்.
- ஆர்க்காடு என்ற நகரத்தைப் போன்றது அவள் அழகென்று உவமை கூறுவதும் அவள் மதிநுட்பத்தின் சான்றாகின்றது.

- பேரழகு இருக்கத்தக்கதாகவே பரத்தையைத் தேடிச் சென்ற நீ உன் பிரிவால் அவள் அழகழிந்து போனபின்னர் வருவதால் பயனில்லை என்று கண்டித்து வாயில் மறுக்கின்றாள்.
- நாம் உமது செயலை மன்னித்தாலும் உன் செயலால் பழிச்சொற்கள் பரவிவிட்டன. ஆகவே துன்பத்தில் இருப்பவளை இன்னும் பழிச்சொற்களாலும் அழித்துவிடாதே என்று வாயில் மறுக்கின்றாள்.
- எம்மூருக்கு நீ வரவும் வேண்டாம் உன் நினைவின் அடையாளமாய் மாலையைத் தரவும் வேண்டாம் என்று அவனை மட்டுமல்ல அவன் நினைவுப்பொருட்களையும் புறக்கணிக்கும் நிலையில் இருப்பதை மதிநுட்பத்தால் உணர்த்துகின்றாள்.

# அணிகள்

- உவமை அணி

**அழிசி ஆர்க்காடு அன்ன இவள்**

**பழிதீர் மாணலம்** என்ற அடிகளில் உவமை அணி இடம்பெற்றுள்ளமை சிறப்பினைத் தருகின்றது. தலைவியின் அழகானது அழிசி என்பவனின் ஆர்க்காடு என்ற நகரத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

**குறிப்புப்பொருள்**

பலரும் நீராடுகின்ற காவிரிக்கரையில் யானை கட்டப்பட்டிருப்பது பலருக்கும் தெரிவது போல பரத்தையின் ஆசையிலே தலைவன் கட்டுண்டு இருந்தமை பலரும் அறிந்த உண்மை என்பதை உணர்த்துகின்றாள்.

# அரும்பதம்

- தார் - மாலை
- பிணித்தல் - கட்டுதல்
- தோடு – விலங்குக் கூட்டம்
- மாணலம் - சிறப்புப் பொருந்திய அழகு

- II) என்புகழ்கின்றது ஏழை எயினனேன் இரவி என்பான்

  தன்புகழ் கற்றை மற்றை ஒளிகளை மறைக்குமாப்போல்

  மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்

  உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத்து உரவுத்தோளாய்

- அ) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
- ஆ) பாடலின் பொருளை எழுதுக.
- இ) உவமை அணியை விளக்குக.

# சந்தர்ப்பம்

- பரதன் தன்னுடைய படைகளுடன் கங்கைக் கரையை அடைந்தமையைக் கண்டு சந்தேகம் கொண்டு போர்வேடம் கொண்டு வீரவுரை பகர்ந்த குகன் பரதனின் தோற்றத்தைக் கண்டதுமே வில் விழ நின்றான். அவனருகே செல்ல பரதன் அவனை வணங்க இருவரும் கட்டித்தழுவுகின்றனர். ஏன் இங்கு வந்தீர்கள் என்று குகன் கேட்டதற்கு நான் இராமனை அழைத்துச்செல்ல வந்தேன் என்ற வார்த்தைகளைக் கேட்டதும் குகன் கூறிய பாடல்களில் இதுவும் ஒன்று,

# பொருள்

- ஏழை வேடுவனாகிய நான் உங்கள் புகழை எவ்வாறு கூறுவேன்? சூரியனானவன் தன்னுடைய கதிர்களினால் ஏனைய கோள்களின் ஒளியை மறைப்பதைப் போல நிலையான புகழினை உடைய சூரியவம்சத்து ஏனைய அரசர்களின் புகழ்களை எல்லாம் உனது புகழுக்குள்ளே அடங்குமாறு செய்துவிட்டாய்.

# உவமை அணி

இரவி என்பான்

- தன்புகழ் கற்றை மற்றை ஒளிகளை மறைக்குமாப்போல்
- மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
- உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்

- என்ற அடிகளில் உவமை அணி இடம்பெற்றுள்ளமை சிறப்பினைத் தருகின்றது.

- சூரிய வம்சத்திலே பிறந்த பரதனானவன் தனது உயர்ந்த குணங்களினால் ஏனைய அரசர்களின் புகழையெல்லாம் மங்கச் செய்து தனது புகழுக்குள் அடங்கச் செய்தான் என்பது சூரியனின் ஒளிக்கு முன்னால் ஏனைய கோள்களின் ஒளியெல்லாம் மங்கிப் போகும் தன்மை உவமிக்கப்பட்டுள்ளது.

- மானிடத் தன்மையைக் கொண்டு - பலர்
- வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு
- மானிடத் தன்மையை நம்பி - அதன்
- வன்மையினாற் புவி வாழ்வு கொள் தம்பி.
- மானிடம் என்றொரு வாளும் - அதை
- வசத்தில் அடைந்திட்ட உன் இருதோளும்
- வானும் வசப்பட வைக்கும் - இதில்
- வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும். (மானிட)

- மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த
- வையத்திலே அவன் செய்த வரைக்கும்
- மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
- வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்
- மானிடம் என்பது புல்லோ - அன்றி
- மரக்கட்டையை குறித்திட வந்த சொல்லோ
- கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு
- கடலை வசப்பட செய்ததும் அதுதான். (மானிட)

- மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
- மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்
- மானிடம் என்பது குன்று - தனில்
- வாய்த்த சமத்துவ உச்சியில் நின்று
- மானிடருக் கினிதாக - இங்கு
- வாய்த்த பகுத்தறிவாம் விழியாலே
- வான்திசை எங்கணும் நீபார் - வாழ்வின்
- வல்லமை மானிடத் தன்மை - என்றேதேர். (மானிட)

அ) மானுடசக்தியின் பெருமைகள் எவை?

ஆ) மர்னுடசக்தியின் பயன்கள் எவை?

இ) மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும் என்ற அடிகளை விளக்குக.

- ஈ) கவிஞரின் எடுத்துரைப்பு முறையை விளக்குக.

# மானிட சக்தியின் பெருமைகள்

- மானிடத்தன்மையால் உலகத்தை ஆளலாம்
- மானிடத்தன்மையின் வலிமையினால் உலகத்தில் நன்றாக வாழலாம்
- மானுடம் என்பது வாள் போல் கூர்மையானது. மானிடத்தன்மையை வசமாகக் கொண்ட தோளினால் வானத்தையும் வசப்பட வைக்கலாம்.
- மானிடசக்தியில் கொள்ளும் நம்பிக்கையால் வாழ்வைப் பெருக்கலாம்.
- மானிட வாழ்வு போல் அவன் செய்தது போல் மானிடத் தன்மைக்கு நிகரான ஒன்று உலகத்தில் கிடையாது

- மானிடத்தனமையினால் காட்டிலும் வாழலாம். கடலையும் வசப்படச் செய்யலாம்.
- மானிடம் என்பது மலைபோல் வலிமையும் உயர்வும் கொண்டது.
- மானிடத்தின் உச்சி சமத்துவம் என்னும் உச்சியாகும்.
- மானிடசக்தியின் ஓரம்சம் பகுத்தறிவு ஆகும்.
- நன்றாக ஆராய்ந்து பார்த்தால் மானிடத்தன்மையே வாழ்வின் வல்லமை ஆகும்.

# பயன்கள்

- உலகை ஆளலாம்.
- ஊலகில் நன்றாக வாழலாம்.
- வுானை வசப்பட வைக்கலாம்.
- வாழ்வின் நம்பிக்கையைப் பெருக்கலாம்.
- கடலையும் வசப்படுத்தும்.
- சமத்துவம் என்ற உச்சபயனை ஏற்படுத்தக் கூடியது.
- பகுத்தறிவு வாய்த்துள்ளது.

# அடி விளக்கம்

- **மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு**

**மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்** என்ற அடிகளில் ஆற்றலும் பெருமையும் பயன்களும் தன்னகத்தே கொண்ட வலிமைமிக்க மானுடசக்தியை அதன் ஆற்றல் அறிந்து போற்றவேண்டும். அந்த மானுட சக்தியின் அருமையை உணராவிட்டால் உலகமே பழித்து நிற்கும். உலகம் என்ன உனது அரிய பெரிய உயிர்கூட வெறுத்துவிடும் இழிநிலை வந்துவிடும் என்று கூறுவது மானுடத்தின் மகத்துவத்தை உணர்த்துகின்றது. மானுடம் போற்றாதவன் வாழத் தகுதியற்றவன் என்பதை உணர்த்துகின்றது.

- இப்போது காக்கா என்கிறேன். நாளைக்கு மச்சான் என்கிற காலமும் நேரமும் வந்துவிடவா போகிறது? நான் எவ்வளவு நல்லவளாகவும் அழகியாகவும் இருந்தாலும் நான் ஏழை, அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?
- தின்ன உண்ண மட்டும் இவ்வீட்டில் ஒரு குறையும் இல்லை. இருநூறு அவணம் முன்னூறு அவணம் என்று ஒவ்வொரு வருʻமும் நெல் வருது. இந்த நிலையில் சோற்றுப் பஞ்சம் இந்த வீட்டில் எப்பிடி வரும்? இருந்தும் உணவால் உடல் வளரும். மனமகிழ்வும் திருப்தியும் எப்படி வரும்? என்று நான் யோசிப்பேன். தின்பதில் குடிப்பதில் கூட நான் ஒரு வேலைக்காரியாகத்தான் நடத்தப்படுகிறேன். எனக்கு சோறு தின்ன ஒரு பீங்கான். தேநீர் குடிக்க ஒரு கோப்பை. படுக்க ஒரு தனிப்பாய். அதற்குத் தலையணையே கிடையாது. இப்படி ஒரு நடைமுறை இந்த வீட்டில் உண்டு.
- எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் நான் என் பீங்கானைக் கழுவி எடுத்துப் போய் என் சோத்தை வாங்கிக்

- கொள்ளவேண்டும். அது போல எல்லோரும் தேநீர் குடித்து முடித்ததும், நான் எனது கோப்பையைக் கழுவி எடுத்துச் செல்லவேண்டும். சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது நான்: அரிசி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறி வகை அரிவது எல்லாம் நான். உண்ணும் போதும் குடிக்கும் போதும் மட்டும் நான் இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்?

- முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா? என் உம்மா, ஐந்து ‘வக்து’ம் ஒழுங்காகத் தொழாவிட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா. தறாவீஹ் தொழப்போவா, ஹறாம் ஹலாலுக்கு பயந்து நடப்பா. அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக்கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால்தானே இழிந்தவளானேன்! என் ஆசையின்படி உடுக்கமுடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்கமுடியவில்லை!

- அ) வர்க்கரீதியான அடக்குமுறைகள் எவை?
- ஆ) தான் அடக்கப்படுவதைத் தாங்கமுடியாத ஆற்றாமையும் சீற்றமும் வெளிப்படுமாறு
- இ) **நான் ஏழை, அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?** என்ற கூற்றை விளக்கு.
- ஈ) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக.

## அ) வர்க்கரீதியான அடக்குமுறைகள் எவை?

- எவ்வளவு நல்லவளாகவும் அழகியாகவும் இருந்தாலும் நான் ஏழை, அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?
- தின்பதில் குடிப்பதில் கூட நான் ஒரு வேலைக்காரியாகத்தான் நடத்தப்படுகிறேன். எனக்கு சோறு தின்ன ஒரு பீங்கான். தேநீர் குடிக்க ஒரு கோப்பை. படுக்க ஒரு தனிப்பாய். அதற்குத் தலையணையே கிடையாது. இப்படி ஒரு நடைமுறை இந்த வீட்டில் உண்டு.
- சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது நான்: அரிசி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறி வகை அரிவது எல்லாம் நான். உண்ணும் போதும் குடிக்கும் போதும் மட்டும் நான் இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்?
- அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக்கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால்தானே இழிந்தவளானேன்! என் ஆசையின்படி உடுக்கமுடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்கமுடியவில்லை!

# ஆற்றாமையும் சீற்றமும்

- நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?
- இருந்தும் உணவால் உடல் வளரும். மனமகிழ்வும் திருப்தியும் எப்படி வரும்?
- சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா?
- தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது நான்: அரிசி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறி வகை அரிவது எல்லாம் நான். உண்ணும் போதும் குடிக்கும் போதும் மட்டும் நான் இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்?
- முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா?

## நான் ஏழை, அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது? என்ற கூற்றை விளக்குக

- போடியாரின் மூத்தமகனை காக்கா என்று கூப்பிட மட்டுமே தனக்கு முடியும் என்பதையும் ஏழைச்சிறுமிக்குள்ள கனவுகளின் வரையறையையும் உணர்த்துகின்றார். ஒரே வீட்டில் பணக்காரரும் ஏழையும் இருந்தாலும் ஓடும் புளியம்பழமும் போல் அவர்கள் சேரமுடியாதவர்கள் என்பதையே ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது? ஏன்ற ஏக்கக் கூற்றின் ஊடாக வெளிப்படுத்துகின்றார். வர்க்க இடைவெளியை இவ்வரிகள் வாசகனுக்குத் தாக்கமாக வெளிப்படுத்துகின்றன.

# ஆசிரியரின் மொழிநடை

- முஸ்லிம்மக்களின் பேச்சுமொழியைப் பயன்படுத்தி உள்ளார். (காக்கா, உம்மா)
- சாதாரண மக்களின் பேச்சுமொழியைக் காணமுடிகின்றது. (தண்ணி, சோத்தை)
- கவித்துவமான மொழிநடையைக் காணமுடிகின்றது. ( என் ஆசையின் படி உடுக்கமுடியவில்லை. என் எண்ணத்தின்படி நடக்கமுடியவில்லை)
- தர்க்கரீதியான மொழிநடையைக் காணமுடிகின்றது. (முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா?)
- வினாக்களை எழுப்பி சிந்தனையைத் தூண்டுகின்ற மொழிநடையைக் காணமுடிகின்றது.
- நீண்ட வசனங்களைக் காணமுடிகின்றது.
- நான் தண்ணி அவங்க எண்ணெய் என்ற அழகிய உருவகப்படுத்தலைக் காணமுடிகின்றது.

# 3. திருக்குறள்

**வலியறிதல்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,

(அ) வலியின் பகுதியும் பயனும்

(ஆ) தன் வலி அறியா இடத்து ஏற்படும் இழுக்கு

இ) மாற்றான் வலி, துணைவலி, வினை வலி அறியா இடத்து ஏற்படும் குற்றங்கள்

(ஈ) கொடை வழங்குதல் குறித்த வலியறிதல்

உ) அணிகள் ஆகியவற்றை விளக்குக.

# (அ) வலியின் பகுதியும் பயனும்

வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

ஒல்வது அறிவது அறிந்து அதன்கண் தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்

# ஆ) தன் வலி அறியா இடத்து ஏற்படும் இழுக்கு

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்

அமைந்து ஆங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

# இ) மாற்றான் வலி, துணைவலி, வினை வலி அறியா இடத்து ஏற்படும் குற்றங்கள்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகிவிடும்

# கொடை வழங்குதல் குறித்த வலியறிதல

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி

ஆகாறு அளவு இட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை

ஆளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல்
இல்லாகித் தோன்றாக் கெடும்

உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வுளவரை வல்லைக் கெடும்

# பிறிது மொழிதல் அணி

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகிவிடும்

# 4. கம்பராமாயணம்

**குகப்படலத்தில்** பரதனுடைய படைகள் கங்கைஆற்றைக் கடக்கும் பகுதியை அடிப்ப்படையாகக் கொண்டு,

அ) படகுகள் பற்றிய தோற்றம்

ஆ) யானைப் படைகள் கடந்ததன்மை

இ)) பெண்கள், முனிவர்கள் கடந்ததன்மை

ஈ) அணிகள் ஆகியவற்றை விளக்குக.

# அ) படகுகள் பற்றிய தோற்றம்

- சிவனுடைய கயிலை மலையைப் போலவும் வில்லாக வளைத்த மகாமேரு மலையைப் போலவும் குபேரனுடைய புஸ்பகவிமானம் போலவும் விளங்கின.
- பெண்களின் நடையைப் போன்ற வேகமும் அன்னப் பறவைகளே வெட்கும்படியான வேகமும் உடையனவாக விளங்கின.
- இங்குள்ளவர்களை ஏற்றி இறக்கிவிட்டு வெறுமையாய் வரும் தோற்றமானது மழையைப் பொழிந்துவிட்டு கடலைநோக்கி வரும் மேகத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.
- பெரிய பாய்மரக்கப்பல்களைப் போல விளங்குகின்றன.
- இருபக்கமும் துழாவுகின்ற துடுப்புகள் கால்களைப் போல விளங்க படகுகள் நண்டுகளைப் போலச் சென்றன.

# யானைப்படைகள்

- யானைகள் ஒன்றோடு ஒன்று மோதியபடி கங்கைநீர் முழுவதையும் குடித்துவிடுவனபோல் சென்றன.
- கொடியோடு கப்பல் செல்வதைப் போல நீண்ட தும்பிக்கைகளை உயர்த்தியபடி நீந்தியபடி சென்றன.
- யானைகள் கங்கையாற்றினை ஊடறுத்துச் செல்கின்ற பொழுது சங்குகள், சுறாமீன்கள், முத்துகள், இரத்தினங்கள் போன்றவை கரைநோக்கித்தள்ளப்பட்டன கடலும் வந்து இணைந்துகொண்டது.

# பெண்கள், முனிவர்கள் கடந்ததன்மை

- பெண்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கியபடி இருந்தார்கள்.
- படகுகள் ஒன்றுடன் ஒன்று மோத இரண்டு பக்கங்களும் அவர்களின் கண்கள் பயத்துடன் ஓடிஓடிப் பார்த்துக் கலங்குகின்றன.
- பேண்களின் பாதங்கள் பட்டு படகுகள்
- தேவமகளிர் நீராடிவிட்டுச் செல்கின்ற விமானத்தைப் போல பெண்கள் ஏறி அமர்ந்திருந்த அப்படகுகள் பொலிந்துவிளங்கின.
- முனிவர்கள் சாதாரண மனிதர்களால் செய்யப்பட்ட படகில் செல்லாதவர்களாய் தவப்பயனால் ஆகாயவழியாகத் தேவர்களைப் போலச் சென்றார்கள்.

# அணிகள்

- **உவமை அணிகள்**
  - அங்குநின்ற படகுள் சிவனுடைய கயிலைமலைக்கும் மகாமேரு மலைக்கும் புஸ்பக விமானத்துக்கும் உவமிக்கப்பட்டுள்ளன.
  - படகுகள் செல்லுகின்ற தோற்றமானது பெண்களின் நடைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
  - இங்குள்ளவர்களை அங்கும் அங்குள்ளவர்களை இங்கும் ஏற்றி இறக்குகின்ற படகுகளின் தன்மை மண்ணுலகில் உள்ளவர்களை விண்ணுலகிற்கும் விண்ணுலகில் உள்ளவர்களை மண்ணுலகிற்கும் அனுப்புகின்ற இருவினைகளின் செயற்பாட்டிற்கு உவமிக்கப்பட்டுள்ளது
  - தேரினைப் பாகங்களாகப் பிரித்து படகில் ஏற்றிய தன்மையானது உடம்பில் இருந்து உயிரைப் பிரித்து இன்னொரு உடலோடு சேர்க்கின்ற தன்மைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

- குதிரைகளின் வெண்மையான உடலானது பால்திரண்ட தன்மைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
- படகுகள் ஒன்றாக வேகமாகச் சென்ற தன்மையானது சேல்மீன்கள் ஒன்றாகச் செல்கின்ற தன்மைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
- பெண்கள் நெருங்கி இருப்பதனால் அவர்களின் மார்புகள் நெருங்கி இருக்கின்ற தன்மையானது யானைகளின் தந்தங்கள் நெருங்கிநிற்கின்ற தன்மைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
- படகுகள் செல்கின்ற வேகத்தினால் கலங்கி ஓடிய பெண்களின் கண்கள் ஆற்றுநீர்ப்பெருக்கம் கண்டு பாய்கின்ற கயல்மீன்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

- இங்குள்ளவர்களை அடுத்தகரையில் இறக்கிவிட்டு வெறுமையாகத் திரும்பிவருகின்ற படகுகள் மழையைப் பொழிந்துவிட்டு கடலை நோக்கி திரும்பிவருகின்ற மழைமேகத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளன.
- படகுகளில் கட்டப்பட்டிருந்த மயில்பீலிகள் அகிற்புகைக்கு உவமிக்கப்பட்டுள்ளன.
- படகுகள் பாய்மரக்கப்பலுக்கு உவமிக்கப்பட்டுள்ள.
- ஆகாயம் கங்கை ஆறிற்கும் நட்சத்திரங்கள் முத்துகளிற்கும் விமானம் படகுகளிற்கும் தேவமகளிர் பெண்களுக்கும் உவமிக்கப்பட்டுள்ளனர்.
- இரண்டு பக்கமும் துடுப்புகள் வலிக்க படகுகள் செல்கின்ற தோற்றமானது நண்டுகள் தமது கால்களினால் நடந்து செல்வதற்கு உவமிக்கப்பட்டுள்ளது.
- ஆகாயவழியாக முனிவர்கள் சென்ற தன்மையானது தேவர்கள் சென்ற தன்மைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

# உருவக அணிகள்

- வெவ்இடர்க்கடல்
- சேனை எறிகடல்
- மகளிர்வெள்ளம்
- வேலை

- **உயர்வு நவிற்சி**
- நாணுறு செலவின் நாவாய்

- **தற்குறிப்பேற்றம்**
- கங்கையும் இராமர் காணும் காதலது என்ன மாதோ

# 5. சிறுகதை

**எஸ்.பொவின் தேர் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,**

அ)தலைப்பின் பொருத்தப்பாடு

ஆ) ஆறுமுகத்தாரின் குண இயல்புகள்

இ) குமாரசாமி மீது ஆறுமுகத்தார் காட்டும் ஈடுபாடு

ஈ) ஆசிரியரின் எடுத்துரைப்புமுறை ஆகியவற்றை விளக்குக.

# அ)தலைப்பின் பொருத்தப்பாடு

- **கொடிஞ்சொடு தட்டும் அச்சும் ஆழியும் கோத்த மொட்டும்**
- **நெடுஞ் சுவர் கொடியும் யாவும்** என்று கங்கைகாண் படலத்தில்(52) படித்ததைப் போலவே தேருக்குப் பல்வேறு பாகங்கள் இருக்கின்றன. அதைப் போலவே குடும்பத்திற்குப் பல்வேறு அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். அதில் அச்சாணியைப் போல குடும்பத்தலைவர் முக்கியமானவர். இங்கு ஆறுமுகம் என்ற தந்தையைச் சுற்றிப் புதுவருடத்தன்று பிள்ளைகள் அன்போடும் உரிமையோடும் எங்கிருந்தெல்லாமோ ஒன்று சேர்கின்றார்கள். எல்லாப் பாகங்களும் ஒன்று சேரும் போதே தேர் நகரும். அதே போல இங்கும் ஆறுமுகம் எல்லோரையும் ஒருமுகமாக்கி குடும்பத்தேரை நகரவைக்கின்றார். வருடத்தில் ஒரு முறைதான் தேர்த்திருவிழா நடக்கும். அதே போல வருடத்தில் புதுவருடத்தன்றுதான் அதன் சாட்டில் எல்லோரும் ஒன்று சேர்வார்கள். அந்த வகையில் தேரின் பாகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தாலே அச்சாணியின் மையத்தில் தேர் நகரும். அதே போல பல்வேறு எண்ணங்களைக் கொண்ட பிள்ளைகளையும் எல்லோரும் சமன் என்ற எண்ணத்துடன் ஒன்று சேர்த்து நகர்த்தும் அச்சாணித் தந்தையாக ஆறுமுகம் படைக்கப்பட்டுள்ளார். தனது பிள்ளைகளை ஆராய்ந்து குராமசாமியை தேர்ந்து கொள்வதனால் வினைச்சொல்லாகவும் இத்தெலைப்புப் பொருத்தமானது. இவ்வாறு பல்வேறு காரணங்களால் இச்சிறுகதைக்கு தேர் என்ற தலைப்பு மிகப் பொருத்தமாகின்றது.

# ஆறுமுகத்தாரின் குண இயல்புகள்

- இச்சிறுகதையின் தலைமைப்பாத்திரமாக விளங்குபவர்தான் ஆறுமுகம். யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்துத் தந்தைகளின் ஒரு குறியீடாகப் படைக்கப்பட்டுள்ளார். எல்லாப் பிள்ளைகளையும் ஒன்றாகப் பார்க்கவேண்டும் என்ற எண்ணமும் மற்றப்பிள்ளைகள் குமாரசாமியைப் புறக்கணித்தபொழுது அவன் மீது தனித்த வாஞ்சை செலுத்தும் ஒரு தந்தையின் தவிப்பும் பொறுப்பும் கொண்டவராகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். நுணுக்கமான நேரக்கணக்கில் இயங்குதல், இறைநம்பிக்கை, இளைஞர் பருவத்தில் ஆரோக்கியமான உணவுப்பழக்க வழக்கம், முதுமை உணர்வை வெளிப்படுத்த விரும்பாத கௌரவ எண்ணம், தனது எல்லாப்பிள்ளைகளையும் புரிந்து வைத்திருக்கும் தன்மை, அவர்களின் கனவு மெய்ப்படவேண்டும் என்ற எண்ணம், தனது கௌரவத்தை விட்டுக்கொடுக்காத்தன்மை, கலைகளின் மீதான ஈடுபாடு, சமுதாய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் என்று பல்வேறு குணப்பண்பு உடையவராகப் படைக்கப்பட்டுள்ளார்.
- வைகறைத் துயிலெழும் பழக்கத்தை வாலாயப்படுத்திக்கொண்டவர்.

- கடிகாரத்தைப் பார்க்காது கடிகாரத்தின் விநாடி முள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக்கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது.
- பார்வதிப்பிள்ளையைத் திருமணம் செய்து நேர்த்திக்கடன் இருந்து சுப்பிரமணியனைப் பெற்றவர். தகப்பனை இழந்து அதன் பிறகு ஆறு பிள்ளைகளைப் பெற்று ஓய்ந்துபோய் பார்வதிப்பிள்ளையும் விடைபெற்றுக்கொண்டடார். அதன் பிறகு அரின் நாளெல்லாம் காடாகிப் போனது. பிறகு உடல் சருகாகிப் போய் முதுமையும் சேர்ந்துகொண்டது. தனது கடைசி மகள் பத்மாவைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டால் நிம்மதியாகக் கண்ணை மூடலாம் என்று காத்திருப்பவர்.

- இளைஞனாக இருந்த பொழுது நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்திரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டும் சாப்பிட்டு நாலு மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுப் பச்சைமிளகாயுடன்தான் காலை உணவை நிறைவேற்றிய ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் கொண்டவர்.
- முதுமையில் திடீரென் குந்தி எழும்பச் சிரமப்பட்டாலும் அதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாதவகையில் செய்துகொள்ளும் கௌரவக் குணம் கொண்டவராக விளங்குகின்றார்.
- எல்லாப்பிள்ளைகளின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் புரிந்துகொண்டவராக இவர் விளங்கினார்.
- ஆறுமுகம் பஞ்சாங்கம் பார்த்து வைப்பதில் வெகு ஒழுங்கு. கடிகாரம் பார்க்கும் பழக்கம் இல்லாத அவர் எந்தச் சுபவெளையையும் விநாடி தப்பாமற் சொல்லுவார்.

- குமாரசாமியை எல்லோரும் உதறித்தள்ளிய பொழுது ‘இனி விரலை வெட்டியெ எறியிறது?’ ‘ஐந்து விரலும் ஒரே மாதிரியோ?’ என்று அவனை விலத்திக்கொள்ளாதவர். எல்லோரும் சாதி, மதம் என்று பாராட்டிபொழுது அவற்றைப் பற்றி கிஞ்சித்தும் எண்ணாத உயர்ந்த சமத்துவ எண்ணங்கொண்டவராகப் படைக்கப்பட்டுள்ளார்.
- பிள்ளைகள் தனியெ குடும்பத்திற்கு உரியவர்கள் மட்டும் அல்லர். சமூகப்பயன்பாட்டிற்கும் உரியவர்கள். சமூகத்திற்குப் பயன்படுதலே உச்சநிலை என்ற தெளிவுடைய சமூக நோக்குடைய தந்தையாகப் படைக்கபட்டுள்ளார்.
- வருடப்பிறப்பன்றாவது எல்லாப்பிள்ளைகளும் ஒன்று படவேண்டும் என்ற எண்ணம் உடையவராக விளங்கினார்.
- நாடகம் பார்ப்பதிலும் தனது மகன் குமாரசாமியின் கலைத்திறமைக் காணபதிலும் விருப்பம் உடைவராக விளங்கினார்.

# குமாரசாமி மீது ஆறுமுகத்தார் காட்டும் ஈடுபாடு

- ரோஜா இதழ்ப்படுக்கையான மென்மைசேர் நினைவுகளில் ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல்.
- நெஞ்சில் குடிகொண்டிருந்த மள் ரோஜா இதழ்ப்படுக்கைக்குள் இனிதாக மறைகின்றது.
- அவன்ரை மூளைக்கு அவன் உப்பிடியே இருக்கவேணும்? சீமைப்படிப்பெல்லாம் படிச்சு ரெண்டு மூண்டு காரும் நாலைஞ்சு பங்களாவும் வைச்செல்லோ வாழவேணும்.
- இனிவிரலை வெட்டியே எறியிறது?
- கையில இருக்கிற அஞ்சு விரலும் சமமே?
- அவனை ஊருக்காகப் பெத்தன்.

- குமாரசாமி வந்திட்டானோ எண்டு எட்டிப்பார்க்கிறார். தொட்டாச்சுருங்கி இலைகள் கூம்புகின்றன.
- வெண்கலக் கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்
- இவன்ரை சிரிப்பு ஒருநாளும் மாறாது. என்னைப் போல சுருட்டை மயிர்.
- நீலக்கட்டம் போட்ட சாறன் - குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்திலே கூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது.
- என்ன இருநதாலும் மரியாதை தப்பாது. குனிந்த தலையோடுதான் கேப்பான். ஆனாக் கடைசியாத் தான் நினைத்ததைத்தான் செய்வான்.
- நாடகம்
- இஞ்சி விசுக்கோத்து

# ஆசிரியரின் எடுத்துரைப்புமுறை

- பொருத்தமான தலைப்பு
- பாத்திரவார்ப்பு
- சூழல்
- வர்ணனை
- காலத்தை வரலாற்றை மொழிக்குள்ளால் கொண்டு வருதல்
- யாழ்ப்பாணப் பேச்சுமொழி
- வசைமொழி
- ஆங்கிலம் கலந்த மாழி
- வடமொழிப்பயன்பாடு
- உவமைத்தொடர்
- கவித்துவம்
- நீண்ட வசனங்கள்

# 6. கட்டுரை

**சுவாமி விபுலானந்தரின் தமிழ்த்தொண்டு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

அ) தமிழ்மொழியின் பெருமைகள்

ஆ) இயற்ற வேண்டிய தமிழ்த்தொண்டுகள்

இ) உத்தமக்கவிகள் பற்றியும் அதில் பாரதி பற்றியும் அவர் எண்ணங்கள்

ஈ) ஆசிரியரின் மொழிநடை ஆகியவற்றை விளக்குக.

# அ) தமிழ்மொழியின் பெருமைகள்

- முடியுடை மூவேந்தர்களால் வளர்க்கபட்டது
- ஆகத்தியரை முதலாகக் கொண்ட புலவர் பெருமக்கள் குழுமியிருந்து முச்சங்கங்கள் மூலமாகத் தமிழ் -ஆராய்ந்து வளர்க்கப்பட்டது
- இப்பொழுது வழங்குகின்ற மொழிகள் எல்லாம் தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய மொழி
- உலகின் பலபாகங்களிலும் வாழ்கின்ற கோடிக்கான மக்கள் பேசுகின்ற உயிருள்ள மொழியாக விளங்குகின்றது.
- பாவலரும் நாவலரும் துடிப்போடு வளர்த்துவருகின்ற மொழியாக இது விளங்குகின்றது.
- புல நன்மணிகளைத் தன்னகத்தே கொண்ட அரிய கருவூலமாகத் தமிழ் விளங்குகின்றது.

# இயற்ற வேண்டிய தமிழ்த்தொண்டுகள்

- முடியுடை மூவேந்தரும் முச்சங்கமும் இல்லை. நாம்தான் இருக்கின்றோம். எனவே தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டிய பெரும் பொறுப்பு எமக்கே உரியதாகும்.
- சில காலம் ஊக்கம் குன்றியிருந்த தமிழ்த்தாய் இப்பொழுது உயிர்பெற்றிருக்கின்றாள். பாவலரும் நாவலரும் அவள் அடிபோற்றுவதைப் போல நாமும் ஆர்வலராய்த் தமிழுக்குத்தொண்டு செய்யவேண்டும்.
- தமிழ்க்கருவூலத்துள் இருக்கின்ற நன்மணிகளை எடுத்து அவற்றின் மதிப்பினை எல்லோருக்கும் உணர்த்துதல் வேண்டும்

- பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
- இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
- மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை
- திறமான புலமையெனிற் பிறநாட்டார் அதை வணக்கஞ்செய்யவேண்டும்
- தேகத்துக்கு வலிமையையும் மனதுக்கு உறுதியையும் தருகின்ற எண்ணங்கள் தமிழ் நாடெங்கும் பரவுவதற்கு முயற்சித்தல்வேண்டும்.
- பாரதியார் போன்ற கவிசிரேட்டர்களை இந்த நாட்டிலே உதிக்கச் செய்யுமாறு உலகமாதாவாகிய பராசக்தியை வேண்டிக்கொள்ளவேண்டும்.
- சிற்பம், இரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், கணிதம், தர்க்கம் என்று பல்துறைகளாய்க் கடல்போல் விரிந்திருக்கின்ற வடமொழிநூல்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல்வேண்டும்.

# உத்தமக்கவிகள் பற்றியும் அதில் பாரதி பற்றியும் அவர் எண்ணங்கள்

- வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்கும் ஆற்றல் உத்தமகவிகளுக்கு மாத்திரமே இருக்கின்றது.
- கலைமகளுடைய அருளினைப் பெற்ற கவிவாணர் பிரமனைப் போல் புத்துருவங்களை ஆக்கவல்லவர்.
- உத்தம கவிகளின் கருத்துகளை நுனித்து நோக்கினால்தான் மக்கள் தாம் அடையவேண்டும் என்னும் நிலையினையும் நோக்கத்தினையும் மனதிலே தெளிவாக உருவகப்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.
- இவ்வாறு நோக்கத்தைத் தெளிவாக்கி செய்கையை அதிகரிக்கவைத்து வாழ்க்கையை உயர்வடையச் செய்ய வழிகாட்டும் வல்லுனர்களே உத்தமகவிகள்.

- இக்காலத்து நாகரிக வழக்கங்களுக்கும் பலதேசத் தொடர்புகளுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற்படும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் உடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்கவல்ல உண்மைக்கவி ஆவான். இக்கூற்றுக்கு மிகப் பொருத்தமானவர் பாரதியார்.
- தமிழ்நாடு செய்த தவப்பயனாகவே தோன்றியவர்.
- கவியரசராகிய சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகள் சிலகாலத்திற்குள்ளேயே தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்துவருகின்றது,
- புாரதியாரைப் போன்ற கவிசிரேட்டர்கள் தமிழ்நாட்டில் தோன்றவேண்டும் என்று பராசக்தியிடம் பிரார்த்திக்கச் சொல்கின்றார்.

# ஆசிரியரின் மொழிநடை

- பழந்தமிழ்நடையினை ஆங்காங்கு காணமுடிகின்றது.

  ஒத்தபான்மை, அடியிணை, யாக்க வல்லவர்கள்,

- அழகிய உவமைத்தொடர்களைப் பயன்படுத்துகின்றார்.

  செல்வத்தில் வளர்ந்த சீமாட்டி அல்லலுற்று அலைகின்ற தன்மை போல, நான்முகத்தேவனைப் போல புத்துரவங்களை ஆக்கவல்லவர்கள்

- வாரீர் சகோதரர்களே என்று முன்னலைப்படுத்துகின்ற மொழிநடையைக் காண முடிகின்றது.

- கவித்துவமான மொழிநடையைக் காணமுடிகின்றது.

  நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும்.

  செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்

- உருவக அணிப் பயன்பாட்டினைக் காணமுடிகின்றது.

  தமிழ்மாது, அடியிணை மலர்

- வினாவினை எழுப்பி விடையினையும் சிந்தனையினையும் கிளர்த்துகின்ற ஆற்றொழுக்கான மொழிநடையாகக் காணப்படுகின்றது.( மறுக்கவல்லார் யாவர்?)

- நீண்ட வாக்கியங்களைப் பயன்படுத்தி உள்ளார்.

- தர்க்கரீதியான மொழிநடையைக் காணமுடிகின்றது.

# 7. நாவல்

**வ.அ.இராசரத்தினத்தின் ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு,

அ) இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த தாமோதரம்

ஆ) நாவலில் வெளிப்படும் காத்திருப்பு

இ) பெண் கல்வி பற்றிய சிந்தனைகள்

ஈ) ஆசிரியரின் புனைதிறன் **ஆகியவற்றை விளக்குக.**

# அ) இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த தாமோதரம்

- காதலைவிட தான் கொண்ட இலட்சியத்திற்காக வாழ்கின்ற பாத்திரமாக இந்நாவலில் தாமோதரம் படைக்கப்பட்டுள்ளான்.
- கனவு காணும் கண்கள், தலைக்குள் எத்தனையோ சிந்தனைகள், மனதுக்குள் எத்தனையோ சிந்தனைகளைக் கொண்ட இலட்சியப் பாத்திரமாக தாமோதரம் படைக்கப்பட்டுள்ளான்.
- காதல் இருந்தபோதிலும் கிராம முன்னேற்றத்திலும் குடும்ப முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட இலட்சிய மனநிலை கொண்ட பாத்திரமாக உள்ளான் பகட்டுகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் விருப்பப் படாமல் மக்களின் தேவைகள் நிறைவேறுவதில் அக்கறையுள்ள பொருளாதார ரீதியிலான தூரநோக்கு உடையவனாக உள்ளான்.
- தாமோதரம் பெண்களின் கல்வி தொடர்பாக ஆழமான அக்கறை கொண்டிருந்தான்.
- இளவயதுத்திருமணம், பெண்கள் மீதான அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராகவும் குரல்கொடுத்தான்.
- கிராமத்தின் வளர்ச்சிக்காக அயராது சிந்தித்தவனாக செயற்பட்டவனாக விளங்கினான்.

- அரசியலை எவ்வாறு எதிர்கொள்வது என்ற தெளிவு உடையவனாகவும் உள்ளான்
- தனது ஆசிரியரான சின்னத்தம்பி மீது மிகுந்த அக்கறை கொண்டவனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவரின் கொள்கைகளில் விருப்பு உள்ளவனாகவும் அவரின் கொள்கைகளைப் பின்பற்றுபவனாகவும் உள்ளான்.
- தனது மச்சாளான செளந்தரம் கற்பதற்காகத் தொடர்ந்து போராடினான். வீணையை இழந்த சரஸ்வதிகளாக பெண்கள் மாறுவதைச் சகிக்கமுடியாத அவன் அவள் படித்து அந்த ஊரின் முதல் பெண் ஆசிரியராக வரவேண்டும் என்று கனவு கண்டான்.
- சாதி மத வேறுபாடுகளைப் பற்றிச் சிந்திக்காமல் எல்லோருடனும் சகஜமாகப் பழகும் முன்னோடிப் பாத்திரமாக விளங்கினான்.
- தனது தம்பி தங்கை போன்றோரையும் கற்றவர்களாகி உத்தியோகத்தில் இருத்திப் பார்க்க ஆசைகொண்டவன்
- தான் ஒரு டாக்டராகவோ அல்லது விஞ்ஞான ஆசிரியராக வரவேண்டும் என்ற இலட்சியம் கொண்டவன்.

- **நாவலில் வெளிப்படும் காத்திருப்பு**

தாமோதரம் தன்னுடைய குடும்பத்தை முன்னேற்றவேண்டும் என்றும் கிராமத்தை முன்னேற்ற வேண்டும் என்றும் அதுவரை சௌந்தரத்தைத் திருமணம் செய்யாமல் காத்திருக்கின்றான்.

சௌந்தரமும் தாமோதரத்திற்காக ஆசிரியையாகி யுகம் யுகாந்திரமாக காத்திருப்பேன் என்று காத்திருக்கின்றாள்

இருவரும் சேர்ந்து வாழவேண்டும் என்று கிராமம் காத்திருக்கின்றது.

இருபது வருடங்களாக அதே ஊரைச் சேர்ந்த ஆசிரியர்களை உருவாக்குவதற்காகவும் பல்வேறு உத்தியோகத்தர்களை உருவாக்குவதற்காகவும் இருபது வருடங்களாகச் சின்னத்தம்பி ஆசிரியர் காத்திருந்தார்.

இனக்கலவரத்தினால் அந்த ஊருக்குக் போகமுடியாமல் அந்த ஊரினைச் சேர்ந்த பலரும் தவிப்போடு காத்திருக்கின்றார்கள். அந்த மக்களின் வரவிற்காக வெண் மணற்கிராமமும் காத்திருந்ததை இந்நாவல் வெளிப்படுத்துகின்றமையால் இந்நாவலின் தலைப்புப் பொருத்தப்பாடானது ஆகும்.

# பெண் கல்வி பற்றிய சிந்தனைகள்

- அறிவு கெட்ட ஜென்மங்கள் (11)
- அவனுக்குத் தன் கிராமமக்களின் அறியாமையையிட்டு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பதின்மூன்று பதினான்கு வயதில் பெய்கள் பராயமடைந்ததும் அதை ஊருக்கெல்லாம் பறையடிப்பதைப் போல ஒலிபெருக்கியை முடுக்கிவிட்டு நீராட்டுவிழா நடத்தி அதன்பின் அந்தப் பெண்ணுக்கு அறிவின் பிரகாசமே படக்கூடாது என்று எண்ணுவார்கள்.
- அப்பா சொன்னார் என்று நீயும் போகாம இருந்திற்றாய். எல்லாம் நீ இந்த ஊரிலே பிறந்த கொடுமை. நீயும் தம்பலகாமத்தில பிறந்திருந்தாப் படிப்பை நிறுத்தியிருக்க மாட்டாய். இந்த நாட்டில முடியாதெண்டு அந் ஊரில ஆணும் பெண்ணுமா கிராஜுவெட் பணிட்டு வாறாங்க(29)
- இப்ப இந்தியாவுக்குப் போகத் தேவையில்லை. எஸ்.எஸ்.ஸி மட்டும் ஆலங்கேணியில படித்து ஆகக்குறைந்தது ஒரு ஆசிரியை ஆகலாம். ஆலங்கேணியில் முதலாவது ஆசிரியையாக நீ ஆவாய் என்று கனவுகண்டேன்.

- எல்லார் விருப்பத்துக்கும் நீ ஆடேலாது. நீபள்ளிக்குப் போகத்தான் வேணும்.
- வீணையைப் பறிகொடுத்த சரஸ்வதி போல் அவள் எட்டாம் வகுப்புச் சித்தியடைந்ததோடு வீட்டுக்குள் முடங்கிவிட்டாளே.
- உலகியே முதலாவது பெண் பிரதமரை இந்தநாடு பெற்றிருகிறது. ஆனால் அப்பெண் பிரதமரின் நாட்டுப் பெண்களுக்கு எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்க விருப்பமில்லை.(37)

- மறைப்புக் கட்டிய கிடுகுவேலிக்குள்ளாலதான் உலகத்தைப் பாக்குது நம்ம பெண் சமூகம். எப்பதான் இவர்கள் நேரடியாக உலகத்தைப் பார்க்கப் போகிறார்களோ? இந்த வேலியெல்லாம் எப்பத்தான் தொலையப் போகுதோ? (40)
- படிச்சதுபோதும் மச்சான். இன்னமும் படிச்சாளெண்டா அவள் என்னை மதிக்கமாட்டாள். படிச்சி கிடிச்சி வாத்தியாராப் போனாளெண்டாப் பிறகு ஒரு வாத்தி மாப்பிளைதான் தேவைப்படும்.
- இந்தக் கிராமத்தின் இளஞ்சமூகம் எத்தனை கேவலமாகவும் குரூரமாகவும் சிந்திக்கின்றது. என்று எண்ணுகையில் அந்த எண்ணத்தின் வேதனை அவனாற் தாங்கமுடியாமல் இருந்தது. (67)
- நம்ம ஊர்ப்பெண்களுக்கு இன்றைக்கு வேண்டுவது இந்தத் துணிச்சலும் வீரமும்தான். (72)

- ஊர் ஏதாவது சொல்லும் என்று பயந்துதானே உங்கள் அப்பாவும் கூட உன்னைப் பாடசாலைக்குப் போகவேண்டாம் என்கிறார். ஊருக்கு அவர் பயம். அவருக்கு நீ பயம். பயப்பிடாமல் எதிர்த்துநின்றால் அவரும் பணிந்திடுவார். ((73)
- பெட்டைக் கோழி கூவி விடியாது மச்சான். - இல்லை நீ சொல்வது முழுப்பிழை. நல்லா யோசிச்சுப்பார். நம்ம பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறதுக்கு இதுவரை கொட்டியாரத்தில இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும்தான் வாத்திமார் வந்தாங்க. இன்னம் பத்துவரு஁த்தில பார். ஆணும் பெண்ணுமா நம்ம ஊரிலயும் பத்துப் பட்டதாரி இருப்பம். இருக்கவேண்டும். அப்படியாக வளரவேண்டிய சமுதாயத்தை சின்னஞ்சிறு கதைகள் பேசிக் கெடுத்துப்போடாத.(84)
- சௌந்தரம் ஈச்சந்தீவில் ஆசிரியை ஆனாள்.
-

# ஆசிரியரின் புனைதிறன்

- 1992 இல் எழுதப்பட்ட இந்நாவல் 1960 களை சரித்திர உணர்வுடன் கிராமியம் மாறாது காட்சிப்படுத்துகின்றது.
- இந்நாவலுக்கு எழுதப்பட்ட பின்னுரை இந்நாவலை இன்னொரு தளத்துக்கு செல்லுகின்ற ஒன்றாக மாற்றியமைத்துள்ளது.
- இந்நாவல் முழுவதும் பைபிளில் வரும் ஞர்னி சலோமன் பாடல், தேவாரங்கள், பாரதியார் பாடல், ஆண்டாளின் பாசுர அடிகள், திருமந்திரப் பாடல் என்று பல பாடல்கள், வரிகள் தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டு கதை நகர்ந்துள்ளமை ஓர் உத்தியாகும்.
- நேருவின் சகோதரியாகிய கிருஸ்ணா எழுதிய ‘விதி என்ன செய்யும்?’ என்ற நூலின் கதை இந்த நாவலின் மையக்கருத்தை வலிமைப்படுத்துவதற்காக இடம்பெற்றுள்ளமை ஆசிரியரின் புனைதிறன் உத்தியைக் காட்டுகின்றது.
- பல்வேறு முரண்களின் ஊடாக இந்நாவல் நகர்த்தப்பட்டுள்ளமை இன்னொரு உத்தியாகும்.

- பல்வேறு களங்களையும் அவற்றின் உயிர்ப்புக் குன்றாமல் பயன்படுத்தி உள்ளமை சிறப்பாகும்.
- பேச்சுமொழியைச் சிறந்த மொழியில் பயன்படுத்தி தேவையான பழமொழிகளையும் பயன்படுத்தி உள்ளமை இன்னொரு உத்தியாகும்.
- பொருத்தமான தலைப்பை அமைத்துள்ளமை இன்னொரு உத்தியாகும்.
- பல்வேறு தொன்மங்கள், கர்ண பரம்பரைக் கதைகளை இந்நாவலில் பயன்படுத்தியுள்ளார்.
- உயிரோட்டமான இலட்சிய மிக்க பாத்திரப் படைப்பு இந்நாவலிற்கு சிறப்பினை அளிக்கின்றது.
- சரித்திர நாவலாகவும், தேசிய உணர்வுமிக்க நாவலாகவும், காதல் நாவலாகவும், சமூக நாவலாகவும் பண்பாட்டு நாவலாகவும் இந்நாவல் பரிணாமம் பெற்றுள்ளது சிறப்பான புனைதிறனின் வெளிப்பாடே ஆகும்.

## அ) இ.முருகையனின் இருதுயரங்கள் நாடகத்தில் கந்தப்பு மனோகரன் ஆகியோரின் துயரங்களும் துயரங்களால் உண்டான முரண்களும் வெளிப்படுமாறு

- கந்தப்புவின் துயரம்
  - முதியவயதில் அரிய குழந்தையை இழந்த துயர்
  - மனைவியின் நிலை
  - மெய்ப்பாடுகளும் செயற்பாடுகளும் துயரால் நிறைந்துள்ளன.
  - எந்த ஒரு வேலையும் செய்யமுடியாத துயர்நிலை
  - தனக்குள்ளே முணுமுணுப்பு
  - மனோகரனின் செயல்களால் துன்பம்
  - சிந்திக்கமுடியாத அளவுக்குத் துயர்

# மனோகரனின் துன்பம்

- மனைவியின் ஆபத்தான நிலையால் துன்பம்
- கந்தப்புவை அழைத்துவரத் துன்பம்
- மனைவியின் ஏமாற்றால் நண்பனின் துரோகத்தால் துன்பம்
- கந்தப்புவின் புரிந்துகொள்ளாத சொற்களால் செயல்களால் துன்பம்

# துயரத்தின் முரண்கள்

- இருவரின் துயரமும் இருவேறு துருவங்கள்
- புரிவதற்கு முடியாத நிலை முரணை உருவாக்குகின்றது.
- துயரங்களைச் சுமப்பவர்களுக்கு நீதி நியாயம் தருமம் கிடையாது
- கந்தப்புவின் துயரத்தை மனோகரனால் புரிந்துகொள்ளமுடிகின்றது. ஆனால் கந்தப்புவால் புரியமுடியாமல் கேலிக்கூத்தாகக் காணமுடிகின்றது.

# ஆஅமலன் ஆதிபிரான் பதிகத்தில் புராண இதிகாசக்கருத்துகளின் ஊடான திருமாலின் பெருமைகள்

- வாமன அவதாரம்
- இராம அவதாரம்(2)
- திருமால் பிரமனைப் படைத்தமை
- சிவபெருமானின் துன்பத்தை திருமால் தீர்த்தமை
- ஊழிக்காலத்தில் உலகை விழுங்கிக் காத்தமை
- இரணியனை வதம் செய்த நரசிம்ம அவதாரம்
- ஆலமரத்தின் இலைமேல் பள்ளிகொண்டவர்

# பாரதியார் என்ற கவிதையில் பாரதியின் பெருமைகள்

- தாமரைக்குப் பல இதழ்கள் இருப்பது போல பாரதிக்கும் பல்வேறு ஆளுமைகள் இருந்தன
- புாரதியாரின் படைப்புகள் சூரியனின் ஒளிபோல் இவ்வுலகுக்கு வெளிச்சத்தைத் தருகின்றன.
- புாரதியாரின் படைப்புகளுக்கு அழிவும் வராது. குறைவும் வராது
- புாரதியாரின் படைப்புகள் அரிய சிந்தனையைத் தூண்டுவன
- சந்தம் மிகுந்த பாரதியாரின் கவிதைகள் சிந்தையை உருக்கி சிறப்பபினைப் பெருக்குபவையாக உள்ளன.
- முன்னர் வாழ்ந்த எந்தப் படைப்பாளிகளிலும் இல்லாத புதிய சுவையை பாரதியாரின் படைப்புகள் தருகின்றன.
- புாரதியாரின் படைப்புகளுக்குள்ளால் செல்லும்போது வீரம் பிறப்பதையும் காதல் சிறப்பதையும் காணலாம்.
- பல்வேறு பண்களில் பாடியவன்
- அவனின் கவிதைகள் அஃறிணைப் பொருட்களையும் வசப்படுத்தும் இயல்பு உடையன.

## தேம்பாவணியில் சாந்தியின் ஐயங்களும் மரியாளின் பதில்களும் வெளிப்படுத்தும் யெசுபாலனின் மாட்சிமைகள்

- சாந்தியின் ஐயங்கள்

1. நோவதே இனிதென்று உதித்தான் கொலோ
2. துணைசெல்லும் வீரவெஞ்சேனை இலாயது ஏன்?
3. இத்தேய வேந்தர் செல்வம் ஒன்று இல்லதேன்?
4. வேல்ல வான் உரு வேய்ந்தின் நன்று அல்லதோ?
5. இல் அதே இல இவ்வழி வந்ததேன்?

# மரியாளின் பதில்கள்

- எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ?
- ஆப்பகை தாண்டுமொர் வலி தாங்குவர் யாவரோ?
- தூவரும் பலவும் தொகை சொற்றவோ?